


Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Confederation

Federal Department of Home Affairs FDHA
**Federal Office of Public Health FOPH**


# எனது தடுப்பூசி உனது பாதுகாப்பு

சின்னமுத்து மற்றும் கக்குவான் இருமலிற்கெதிரான தடுப்பூசிகள்

## சின்னமுத்து

### தங்கள் சிசுக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு மத்திய சுகாதாரஅமைச்சும், வைத்தியர் சங்கங்களும் சின்னம்மைக்கெதிரான தடுப்பூசி போடும்படி பெற்றோர்களிற்கு சிபாரிசு செய்கின்றனர்.

சின்னமுத்து என்பது ஒரு மிகப்பெரிய தொற்றுநோயாகும். இது குறிப்பாக பிறந்த குழந்தைகளையும், வளர்ந்தோரையும் தாக்கி பாரிய நோய்ச்-சிக்கல்களைத் தோற்றுவிக்கக்கூடியது. சின்னமுத்துவிற்கு எதிரான பாதுகாப்பற்ற பெற்றோர்களிற்கு (அதாவது இதுவரை சின்னமுத்து நோய் ஏற்படாத அல்லது அதற்கான தடுப்பூசியைப் போடாத பெற்றோர்களிற்கு) அவர்களது பாதுகாப்பிற்காகவும் தமது குழந்தைகளின் பாதுகாப்பிற்காகவும் சின்ன முத்துத் தொற்றிற்கெதிராக தடுப்பூசி போட சிபாரிசு செய்யப்படுகின்றது. குழந்தைகளிற்கு பிறந்த பன்னிரு மாதங்களிற்குப் பின்னரே சின்னமுத்திற்கெதிரான தடுப்பூசி போடப்படுகின்றது.

### சின்னமுத்தினால் சிசுக்கள் மற்றும் கர்ப்பிணிகளிற்கு ஏற்படக்கூடிய ஆபத்து

சிசுக்களிற்கு சின்னமுத்து தொற்றுவதால் பாரதுராமான சிக்கல்கள் ஏற்படுவதற்கான அபாயமும்அடிக்கடி வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டியும் ஏற்படலாம். பொதுவில் சிசுக்கள் நோய்த்தாக்கத்திலிருந்து நன்கு விடுபடினும் சில சந்தர்ப்பங்களில் இறப்பும் ஏற்படலாம். குறிப்பாக நுரையீரலழற்சியினால். அரிதான சந்தர்ப்பங்களில் வைரஸ் கிருமி மூளையில் தங்கியிருந்து பல வருடங்களிற்குப் பின்னர் மூளைத்தோல் அழற்சியை ஏற்படுத்தி இறப்பு நேரிடலாம். கர்ப்பிணியொருத்திக்கு சின்னமுத்து ஏற்பட்டால் அவருக்கு நுரையீரலழற்சி ஏற்படும் அபாயம் அதிகமாகும். அத்துடன் சிசு உடல் நலக்குறைபாட்டுடன் அல்லது குழந்தைப்பேறுத் தவணைக்கு முந்தியோ அல்லது குறைந்த நிறையுடனோ பிறக்க நேரிடலாம்.




### தாய்தந்தையர் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியும்

ஒரு சிறிய ஊசிக்குத்தின் மூலம் பெற்றோர்கள் தம்மையும் தமது சின்னஞ்சிறியவர்களையும் இத்தொற்று நோயிலிருந்து பாதுகாக்கலாம். அவ்வாறு போடப்படும் தடுப்பூசியின் மூலம் வீரியம் குறைந்த சின்னமுத்து தொற்றுக்கிருமி உடலில் ஏற்றப்படுகின்றது. இதனூடாக இத்தொற்றுக் கிருமிக்கெதிரான எதிர்ப்புசக்தி உடலில் தூண்டப்படுகின்றது. இதனால் நோய்த்தொற்று ஏற்படாதிருக்கவும் அல்லது ஏற்பட்டால் அதிலிருந்து பாதிப்பில்லாமல் மீளவும் உடல் தயார்ப்படுத்தப்படுகின்றது. தடுப்பூசியினால் ஏற்படும் பக்கவிளைவுகள் நோய் தொற்றினால் ஏற்படும் ஆபத்துடன் ஒப்பிடுகையில் குறைவானதே. முழுமையான தடுப்பூசியானது வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பைத் தரக்கூடியது.

### பெரியவர்களுக்குரிய தடுப்பூசிக்கான சிபாரிசுகள்

- 1964ம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்கள் இதுவரை இருதடவை சின்னமுத்துத் தடுப்பூசிபோடாதிருப்பின் அல்லது சின்னமுத்து நோய் இதுவரை ஏற்படாதிருப்பின் தடுப்பூசியைப் போட வேண்டும். பிள்ளைபெறும் நோக்கமிருப்போர் கர்ப்பம் தரிக்கும் முன்னர் போட வேண்டும்.

கர்ப்பம் தரித்தவர்கள் முற்பாதுகாப்பைக் கருதி தடுப்பூசி போடக்கூடாது: அப்படி இருந்தும் நீங்கள் தடுப்பூசிபோட்டிருப்பின் கர்ப்பத்தைக் கலைக்க வேண்டிய கட்டாயம் இல்லை. தடுப்பூசி பிள்ளை பிறந்த பின்னரும் போடலாம்.

### சிசுக்களிற்குரிய தடுப்பூசிக்கான சிபாரிசுகள்

- **பொதுவாக:** முதலாவது ஊசி 12வது மாதத்தில். இரண்டாவது ஊசி 15 தொடக்கம் 24மாதங்களின் பின்னர்.
- **பராமரிப்பகங்களில் வளரும் பிள்ளைகள்:** முதலாவது ஊசி 9வது மாதத்திலும் இரண்டாவதுஊசி 12 தொடக்கம் 15 மாதத்திலும்.
- **தொற்றுநோய் பரவின்:** முதலாவது ஊசி 9வது மாதத்திலிருந்தும் இரண்டாவது ஊசி 12தொடக்கம் 15 மாதத்திலும்.
- **நோய்தொற்றிய ஒருவருடன் நேரடியாக தொடர்பு ஏற்பட்டால்:** 9 மாதங்களிற்கு முன்னர், முதலாவது ஊசி போடப்பட்டிருப்பின் அதன்பின்னராக இரு ஊசிகள் போட்டபின்னர், 6மாதங்கள் கழித்து முதலாவது ஊசி.



சின்னமுத்து மற்றும் கக்குவான் இருமலிற்கெதிரான தடுப்பூசிகள்

# எனது தடுப்பூசி உனது பாதுகாப்பு

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Confederation

Federal Department of Home Affairs FDHA
**Federal Office of Public Health FOPH**

## கக்குவான் இருமல்

### சிசுக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு மத்திய சுகாதார அமைச்சும் வைத்தியர் சங்கங்களும் கக்குவான் இருமலிற்கெதிராகத் தடுப்பூசி போடும்படி பெற்றோர்களிற்கு சிபாரிசு செய்கின்றனர்.

இது ஒரு பாரதூரமான ஒரு தொற்று நோயாகும் மற்றும் நோய்க்கிருமிகள் நீர்த்துளிகளின் மூலம் பரவுகின்றது. இந்நோயின் அறிகுறிகளாக கடுமையான இருமலும் மூச்சடைப்பும் இருக்கும். வளர்ந்தோருக்கு இது- பெரிய பாதிப்பான விடயமல்லை. பெரும்பாலும் பெற்றோர்களே தமக்குத் தெரியாமல் பிள்ளைகளிற்குக்கடத்துகின்றனர். இருமல் பல வாரங்கள் நீடிப்பதுடன் பிள்ளைகள் சுவாசிக்கவும், உறங்கவும்உணவுண்ணவும் சிரமப்படுவார்கள்.

### கக்குவான் இருமலினால் சிசுக்களிற்கு ஏற்படக்கூடிய அபாயம்

பிரத்தியோகமாக புதிதாகப் பிறந்த சிசுக்களிற்கு விட்டுவிட்டு சுவாசித்தல் மற்றும் மூச்சுத்தடைப்படல்போன்ற ஆபத்து நிலைகள் தோன்றலாம். மேலதிக சிக்கல்கள்: நுரையீரலழற்சி, காதுக்குத்து, வலிப்பு வருதல் மற்றும் நிரந்தரப் பாதிப்பைத்தரக்கூடிய மூளைசார் நோய்கள். சில சந்தர்ப்பங்களில் ஏற்படலாம். இந்நோயினால் இறப்பும் ஏற்படலாம். நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்தை நோயின் ஆரம்பத்தில் கொடுப்பதன் மூலம் மட்டுமே நோய்ச்-சிக்கல்களில் இருந்து பாதுகாக்கலாம்.

« எனக்குச் சிறிய ஊசிக்குத்து – உனக்கோ பெரியபாதுகாப்பு »




### தாய்தந்தையர் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியும்

ஒரு சிறிய ஊசிக்குத்துவதன்; மூலம் பெற்றோர்கள் தம்மையும் தமது சின்னஞ் சிறியவர்களையும் பாரியவிளைவுகளை ஏற்படுத்தும் கக்குவான் இருமலிலிருந்து பாதுகாக்கலாம். அவ்வாறு போடப்படும் தடுப்பூசியினால் ஏற்படும் பக்கவிளைவுகள் நோய்தொற்றிலிருந்து ஏற்படும் ஆபத்துடன் ஒப்பிடுகையில் குறைவானதே. இறந்தகலங்களை (Totimpfstoff) கொண்ட இத்தடுப்பூசியைக் கர்ப்பகாலத்திலும் பயமின்றிப் போடலாம்.

### வளர்ந்தோரிற்குரிய தடுப்பூசிக்கான சிபாரிசுகள்:

- 25 ற்கும் 29 வயதிற்குட்பட்டோர் தடுப்பூசியைப் புதுப்பித்தல்
- 6 மாதங்களிற்குக் குறைந்த வயதுடைய சிசுக்களை அணுகும் வளர்ந்தோர் தமது தடுப்பூசியை 10 வருடங்களிற்கு முன்னர் போட்டிருப்பின் (குறிப்பாக பெற்றோர், பாட்டன்பாட்டி, சகோதரர்கள்)
- கர்ப்பிணிகள் இத்தடுப்பூசி போட்டு 5 வருடங்கள் கடந்திருப்பின் குறிப்பிட்டிருந்தால்.

### வளர்ந்தோரிற்குரிய தடுப்பூசிக்கான சிபாரிசுகள்:

- **பொதுவாக:** 3 தடவைகளில் 2ம், 4ம்மற்றும் 6ம் மாதங்களில்.
- **பராமரிப்பகங்களில் வளரும் பிள்ளைகளிற்கும் முந்திப்பிறந்த பிள்ளைகளிற்கும்:** 2ம், 3ம்மற்றும் 4ம் மாதங்களில்.
- **தடுப்பூசியைப் புதுப்பித்தல்:** 15 தொடக்கம் 24 மாதங்களிலும் 4 தொடக்கம் 7 வயதிலும் மற்றும் 11 தொடக்கம் 15 வயதிலும்.

மேலதிகத் தகவல்களுக்கு இணையத்தளம்:
**www.sichimpfen.ch**
**www.myvaccines.ch**
**மேலதிகத் தகவல்களுக்கு தொலைபேசி:**
**0844 448 448**

மேலதிக கேள்விகள் இருந்தால் தங்கள் குடும்ப வைத்தியருடன் தொடர்புகொள்ளவும். அவர் தங்களுக்குத் தேவையான தகவல்களைத் தருவார்.

© Federal Office of Public Health (FOPH) Published by: Federal Office of Public Health (FOPH), publication date: March 2016.
This publication is also available in German, French, Italian, English, Portuguese, Spanish, Albanian, Bosnian and in Turkish.
Source: SFBL, Distribution of Publications, CH-3003 Bern, order number: 316.525.tam, FOPH publication number: 2016-OEG-10
www.bundespublikationen.admin.ch. Printed on chlorine-free bleached paper.